தொழு எருவும் போடவில்லை, ஆனால் ஏக்கருக்கு 25 குவிண்டால்



நெற்பயிர்களுக்கு இடையே அதிக இடைவெளி இருந்தால், வேர்கள் நன்கு வளர்கின்றன. மண்ணில் காற்றோட்டமும் நுண்ணுயிரிகளும் அதிகரிப்பதால் நெற்பயிர் நன்கு வளர்கின்றன. நெல், நீர்வாழ் தாவரம் அல்ல, நீரைத் தேக்கி வைத்தால் தான் அதிக விளைச்சல் என்பது உண்மையல்ல. ஆரம்ப களைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே நீர்த் தேக்கி வைக்கப்படுகிறது.

விதையும் நாற்றாங்காலும்
விதைகளைத் தண்ணீரில் கொட்டி, மிதக்கும் விதைகளை நீக்கிவிட்டு மற்றவற்றை விதைக்கவேண்டும். (உப்புக் கரைத்த நீர மிகவும் நேர்த்தியானது). 40 சதுர மீட்டர் (ஒரு சென்ட்) நாற்றாங்கால் தேவை. எட்டு முதல் 15 நாட்களுக்குள் பெயர்த்து நடவேண்டும். பெயர்த்தெடுத்த நாற்றை, 15 நிமிடங்களுக்குள் நடவு செய்யவேண்டும். ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ பாஸ்போ பாக்டீரியா ஆகிய நுண்ணியிர்களை 20 கிலோ மக்கிய தொழு எருவுடன் கலந்து வயலில் நடவு நடும் முன் பரவலாகத் தூவவேண்டும்.

**தொடர்புக்கு**

பாண்டிச்சேரி அறிவியற் கழகம்
எண்.10, இரண்டாவது தெரு
பி.ஆர். கார்டன்ஸ்
ரெட்டியார்பாளையம்,
பாண்டிச்சேரி
தொலைபேசி : 0413-2290733